1973 நவம்பர் 22]

(ii) யந்திர விசை கொண்டு கனியைக் கையாள்கிற வசதிகளுடன் கூடிய கனித்துறைக் கட்டுமான வேலை நடைபெற்று வருகிறது. இது 1975-ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(iii) சென்னைத் துறைமுகத்தில் 'மீன்பிடித் துறைமுகம் கட்டும் திட்டம்' 1975-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : *சென்னை துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட எல்லாப் பணிகளும் எப்பொழுது தொடங்கி முடிவடையும் என்பதையும் அறிவிக்க இயலுமா ?*

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : *தலைவர் அவர்களே, எவ்வளவு பணம் என்பதுபற்றிய புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. ஆனால், அவர்கள் கொடுத்திருக்கிற காலகட்டத்திற்குள்ளாக, கடைசியாக முடியவேண்டிய காலம் 1975-ம் ஆண்டு டிசம்பர் என்று சொல்லுகிறார்கள், அதற்குள்ளாக முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

Utilisation of surplus water near Madras

* 308 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to request the Corporation of Madras to give clearance for constructing bed dams across some of the rivers with a view to utilise the surplus water?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : *செங்கல்பட்டு மாவட்டம், கேசவரம் கிராமத்தின் அருகில் குசத்தலை ஆற்றின் குறுக்கே ஓர் அணை கட்டும் திட்டம் பற்றி மாநகராட்சி கலந்தாலோசிக்கப்பட்டு, வீராணம் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின் இதனை பரிசீலனை செய்யலாம் என்ற மாநகராட்சியின் தீர்மானத்தை அரசு ஏற்றுக் கொண்டு இத்திட்டம் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.*

திரு. ஆ. பரந்தாமன் : *தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கின்ற ஆறுகளில் ஓடுகின்ற உபரி நீரைப் பயன்படுத்தும் வாய்ப்பும் உரிமையும் 300 அல்லது 400 ஆண்டுக்*

காலமாக இருந்து வருகிறது. நூறு ஆண்டுகளுக்கு முன்னால் உருவாகிய சென்னை மாநகராட்சி எங்களுக்கு அத்தகைய உரிமைகளை மறுக்கிறது என்றால், நீங்கள் அதற்கு இசைவு தருவதாக இருந்தால் அந்த வட்டார விவசாயிகளை ஹைகோர்ட்டிலே சந்திக்க வேண்டிவரும். ஆகவே, அரசாங்கம் முன்வந்து, சென்னை மாநகராட்சியை அந்த 'நோ-அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட்' தரும்படியாகச் செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நியாயமான கோரிக்கை என்பதை அரசு உணருகிறது. அதுபற்றி மாநகராட்சியுடன் மறுபடியும் தொடர்பு கொள்ளலாம் என்று அரசு கருதிக்கொண்டிருக்கிறது.

மாயூரம் வட்டத்திலுள்ள சாலைகள்

*** 309 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-72-ம் நிதி ஆண்டில் மாயூரம் தாலுகாவில் அரசு நெடுஞ்சாலைத்துறை மேற்கொண்ட சாலைகள் எவையெவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாயூரம் தாலுக்காவிலுள்ள கீழ்க்காணும் இரண்டு சாலைகளை 1971-72 ஆம் ஆண்டு முதல் சீர்செய்வதற்கும், பராமரிப்பதற்கும், நெடுஞ்சாலைத்துறை மேற்கொள்ளுமாறு உத்திரவிடப்பட்டது:—

(1) ஆக்கூர்-முக்கூட்டு-சின்னன்குடி சாலை—4 மைல்.

(2) மாப்படுகை-கடலங்குடி சாலை—9 மைல் 2 பர்லாங்கு.

*** 310 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரிலுள்ள 2 ஆம் எண் நெடுஞ்சாலையை அகலப்படுத்தி விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?